தினமணி

## இன்றைய வேளாண் செய்திகள்

## <u>அடுத்த 4 நாட்களுக்கு லேசான மழை இருக்கும்; வானிலை ஆய்வு மையம் தகவல்</u>

தென்மேற்குப் பருவமழை இறுதிக்கட்டத்தை நெருங்குவதால் மாவட்டத்தின் சில இடங்களில் லேசான மழை இருக்கும் என்று நாமக்கல் வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. இதுகுறித்து அம்மையம் வெள்ளிக்கிழமை வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு: நாமக்கல் மாவட்ட வானிலையில் அடுத்த 4 நாட்களுக்கு (செப்.27 முதல் 30-ம் தேதி வரை) வானம் பொதுவாக மேகமூட்டத்துடன் சில இடங்களில் 3 மிமீ முதல் 7மிமீ வரை மழை பெய்யக் கூடும். காற்றின் திசைவேகம் மணிக்கு 5 கிமீ முதல் 6 கிமீ வேகத்தில் கிழக்கிலிருந்து வீசக்கூடும். வெப்பநிலை குறைந்தபட்சம் 73.4 டிகிரி பாரன்ஹீட் முதல் அதிகபட்சம் 95 டிகிரி பாரன்ஹீட் வரையும், காற்றின் ஈரப்பதம் குறைந்தபட்சம் 48 சதம் முதல் அதிகபட்சம் 88 சதம் வரை இருக்கும். கோழிப்பண்ணையாளர்களுக்கு.. தென்மேற்குப் பருவமழை அதன் இறுதிக்கட்டத்தை நெருங்குவதால் மாவட்டத்தின் சில இடங்களில் லேசான மழை இருக்கும். பகல் வெப்பம் 95 டிகிரி பாரன்ஹீட் என்ற அளவில் நிலவ வாய்ப்புள்ளதால் பண்ணைக் கோழிகளிடையே தீவன எடுப்பும், முட்டை உற்பத்தியும் இயல்பாகவே காணப்படும். எனினும், தீவனத்தின் தரத்தில் தொடர்ந்து கவனம் தேவை. கோழியின நோய் ஆய்வகத்தில் கடந்த வாரம் மேற்கொள்ளப்பட்ட ஆய்வில், கோழிகள் பெரும்பாலும் குடற்புண் மற்றும் வெப்ப அயற்சியால் இறந்திருப்பது தெரியவந்துள்ளது. எனவே, பண்ணையாளர்கள் தீவன மூலப்பொருட்களில் கிளாஸ்ட்ரிடியம் நோய்க்கிருமி உள்ளதா என்பதை ஆய்வு செய்து தரமான

தீவன மூலப்பொருட்களை உபயோகிப்பதுடன் வெப்பம் அதிகமுள்ள நாட்களில் கோடைகால பராமரிப்பு முறைகளை கடைபிடித்திடவும் வேண்டும். வேளாண் விவசாயிகளுக்கு..: தற்போது பெய்துள்ள மழையை பயன்படுத்தி மக்காச்சோளம் விதைப்பு செய்யலாம். ஒரு ஏக்கருக்கு 8 கிலோ விதையைக் கொண்டு இடைவெளியாக வரிசைக்கு 60செமீம், செடிக்குச்செடி 25செமீ இடைவெளியில் விதைப்பை மேற்கொள்ளலாம் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**<u>களியக்காவிளையில் பரவலாக மழை</u>**

களியக்காவிளை சுற்றுவட்டாரப் பகுதிகளில் வெள்ளிக்கிழமை இரவு பரவலாக மழை பெய்தது. இப்பகுதியில் கடந்த இரு நாள்களாக பகலில் லேசான மழை பெய்து வருகிறது. வெள்ளிக்கிழமை பகலில் வெயில் காணப்பட்டது. பிற்பகலில் லேசான சாரல் மழை பெய்தது. வானம் மேகமூட்டமாக காணப்பட்டது. தொடர்ந்து மாலை 6.30 மணிக்கு தொடங்கி இரவு 9 மணிக்கு மேலும் தொடர்ந்து பரவலாக மழை பெய்து கொண்டேயிருந்தது. இம் மழையால் இப்பகுதியில் இரவில் வெப்பம் தணிந்து குளிர்ச்சி நிலவியது. களியக்காவிளை, படந்தாலுமூடு, குழித்துறை, தையாலுமூடு, குளப்புறம் உள்ளிட்ட பகுதிகளிலும் இரவில் தொடர்ந்து மழை பெய்து கொண்டிருந்தது.

**<u>உள் மாவட்டங்களில் இன்று மழைக்கு வாய்ப்பு</u>**

தமிழகத்தின் உள் மாவட்டங்களின் சில இடங்களில் சனிக்கிழமை பலத்த மழை பெய்ய வாய்ப்புள்ளது என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. தமிழகத்தில் வெப்பச்சலனம் காரணமாக கடந்த சில நாள்களாக மழை பெய்து வருகிறது. இந்த நிலையில் உள் மாவட்டங்களின் சில இடங்களில் பலத்த மழை பெய்யும் என்றும், கடலோரத் தமிழகத்தின் சில இடங்களில் மழை பெய்யும் என்றும் வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. இந்த நிலையில் வெள்ளிக்கிழமை காலை வரையிலான 24

மணி நேரத்தில் புதுக்கோட்டை மாவட்டம், இலுப்பூரில் 90 மி.மீ. மழை பெய்துள்ளது. திருப்பத்தூரில் 70 மி.மீ. மழையும், இளையாங்குடியில் 50 மி.மீ. மழையும் பெய்துள்ளது. அன்னூர் (40 மி.மீ.), பவானிசாகர் (30 மி.மீ.), மேட்டூர், கொடைக்கானல் (20 மி.மீ.), திருவண்ணாமலை, பாபநாசம், பாளையங்கோட்டை (10 மி.மீ.) ஆகிய இடங்களிலும் மழை பெய்துள்ளது.

## வேலிமசால் பசுந்தீவன சாகுபடியில் இரட்டிப்பு வருவாய்!



தமிழகத்தில் மொத்த கால்நடைகளின் எண்ணிக்கை 4 கோடி எனக் கணக்கிடப்பட்டுள்ளது. ஆனால், இவற்றுக்குத் தேவையான பசுந்தீவனம் கிடைக்கிறதா? என்றால் இல்லை. இதனால், பால் உற்பத்தி மிகவும் பாதிக்கப்படுகிறது. எனவே அண்மை காலமாக பசுந்தீவன உற்பத்தியை அதிகரிக்க அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. இதுகுறித்து காஞ்சிபுரம் மாவட்டம், காட்டுப்பாக்கம் வேளாண்மை அறிவியல் நிலைய உழவியல் துறை உதவிப் பேராசிரியர் பெ. முருகன் கூறியது: தமிழகத்தில் உள்ள 4 கோடி கால்நடைகளுக்கு 10 கோடி டன் பசுந்தீவனம் வேண்டும் என்று கணக்கிடப்பட்டுள்ளது. ஆனால் தமிழத்தில் 50 முதல் 60 சதவீதம் அளவுக்கு பசுந்தீவனப் பற்றாகுறை உள்ளது. பசுந்தீவனப் பற்றாக்குறையைப் போக்க, அதிக மகசூல் தரும் தீவனப் பயிர்களை இறவையில் பயிரிட்டு ஒரு ஏக்கருக்கு கிடைக்கும் தீவன மகசூலை உயர்த்துவதாலேயே முடியும். மேலும் புரதச்சத்து பற்றாக்குறையைத்

தவிர்க்க பயறு வகை பசுந்தீவனப் புற்களை சாகுபடி செய்து கால்நடைகளுக்கு கொடுத்து வருகின்றனர். இப்போது உள்ள மழை அளவைப் பார்க்கும்போது நெல், உளுந்து உள்ளிட்ட வேளாண் பயிர்களை சாகுபடி செய்வதைக் காட்டிலும் பசுந்தீவனப் புற்களை விதை உற்பத்திக்காக சாகுபடி செய்யும்போது இரட்டிப்பு வருவாய் ஈட்ட முடியும். குறிப்பாக, வேலிமசால் பசுந்தீவனப் புல்லை விதை உற்பத்திக்காக சாகுபடி செய்தால், 1 ஏக்கருக்கு 100 கிலோ முதல் 110 கிலோ வரை விதை உற்பத்தி செய்யலாம். இதைச் சாகுபடி செய்வதால் மண் வளம் மேம்படுத்தப்படும். பூச்சி, நோய் ஆகியன இந்தப் பயிரைத் தாக்குவதில்லை. குறைந்த நீரிலேயே சாகுபடி செய்துவிடலாம். குறைந்த அளவு வேலையாட்கள் போதுமானதாகும். இதில் 19.2 சதவீதம் புரதம், 27 சதவீதம் உலர்த்தீவனத் தன்மை, 55.3 சதவீதம் செரிக்கும் தன்மையும் கொண்டுள்ளதால் கால்நடைகள் விரும்பிச் சாப்பிடுகின்றன. எனவே பால், மாமிச உற்பத்தி பெருகுகிறது.

**வேலி மசால் பசுந்தீவனம் குறித்த சிறு குறிப்பு:**

**பருவம்**: ஆண்டு முழுவதும் பயிர் செய்யலாம். **நிலம்**: எல்லா மண் வகைகளிலும் பயிர் செய்யலாம். **முன்செய் நேர்த்தி**: நன்கு பன்படுத்தப்பட்ட நிலத்தில் 16-20 ச.மீ. பாத்திகள் அமைக்க வேண்டும். **விதையளவு**: ஹெக்டேருக்கு 20 கிலோ **இடைவெளி**: வரிசைக்கு வரிசை 50 செ.மீ. இடைவெளி விட்டு நெருக்கமாக விதைக்க வேண்டும். **விதை நேர்த்தி**: விதைகள் நன்றாக முளைக்க, கொதிக்க வைத்த குளிர்ந்த நீரில் விதைகளைப் போட்டு 5 நிமிடங்கள் கழித்து நீரை வடிகட்டி விட்டு நிழலில் உலர்த்தி பின்பு விதைக்கலாம். **உர அளவு**: ஹெக்டேருக்கு தொழு உரம் 20 டன், தழைச்சத்து 25 கிலோ, மணிச்சத்து 40 கிலோ, சாம்பல் சத்து 20 கிலோ.

**பின்செய் நேர்த்த**ி: விதைத்த 30 நாள்களுக்கு பின்பு ஒவ்வொரு அறுவடைக்குப் பின்னும் களை எடுக்கவும். **நீர்ப் பாசனம்**: 10-15 நாள்களுக்கு 1 முறை. **அறுவடை**: விதைத்த 80 நாள்களில் முதல் அறுவடையும், பிறகு 40-45 நாள்களுக்கு ஒரு முறையும் அறுவடை செய்யலாம். **மகசூல்**: ஹெக்டேருக்கு 1 ஆண்டுக்கு 80 முதல் 100 டன்கள் வரை மகசூல் கிடைக்கும். வேலிமசால் குறித்த மேலும் விவரங்களை காட்டுப்பாக்கம் வேளாண் அறிவியல் நிலையத்தைத் தொடர்பு கொண்டு, சாகுபடி தொழில்நுட்பங்களைத் தெரிந்து கொள்ளலாம் என்றார் பெ. முருகன். வேலிமசால் பசுந்தீவன உற்பத்தி குறித்து விவசாயிகளுக்கு விளக்கம் அளிக்கும் காட்டுப்பாக்கம் வேளாண்மை அறிவியல் நிலைய உழவியல் துறை உதவிப் பேராசிரியர் பெ. முருகன்.

**<u>விவசாயிகளுக்கு அரசு வழங்கும் சலுகைகள்: வேளாண் துறை தகவல்</u>**



பூந்தமல்லி: நாட்டில் விவசாயத்தை மேம்படுத்தும் வகையிலும், விவசாயிகளை அதிகளவில் ஊக்குவிக்கவும் தேசிய வேளாண் வளர்ச்சி திட்டத்தின் கீழ் பல்வேறு சலுகைகள் வழங்கப்படுகின்றன. நாளுக்கு நாள் விளை நிலங்கள் அனைத்தும் வீட்டு மனைகளாகவும், தொழிற்சாலை களாகவும் மாறி வரும் வேளையில் விவசாயத்தின் அவசியம் கருதி மத்திய, மாநில அரசுகள் பல்வேறு சீரிய திட்டங்களை உருவாக்கி விவசாயிகளை

ஊக்கப்படுத்தி வருகிறது. தேசிய வேளாண் வளர்ச்சித் திட்டத்தின் கீழ், தரமானச் சான்று பெற்ற நெல் விதைகள் ஒரு கிலோவுக்கு ரூ. 10 மானிய விலையில் வழங்கப்படுகிறது. இதுதவிர, விவசாயக் கூலித் தொழிலாளர்களின் பற்றாக்குறை காரணமாக இயந்திரமயமாக்குதலை ஊக்குவிக்கும் வகையில் நடவு இயந்திரம் கொண்டு நெல் நடவு செய்பவர்களுக்கு ஓர் ஏக்கருக்கு ரூ. ஆயிரத்து 500 மானியம் வழங்கப்படுகிறது. இந்தத் திட்டத்தின் கீழ் பசுந்தாள் உர பயிர் விதைகள் 50 சதவீதம் மானியத்தில் வழங்கப்படுகிறது. விதைக் கிராமத் திட்டத்தின் கீழ் விவசாயிகள் தரமான விதைகளை தாங்களே உற்பத்தி செய்து கொள்ள விவசாயிகளுக்குப் பயிற்சி அளிக்கப்படுகிறது. மேலும் அதிகபட்சமாக ஒரு ஏக்கருக்கு 20 கிலோ நெல் விதைகளும், 8 கிலோ பயறு வகை விதைகளும் 50 சதவீத மானியத்தில் வழங்கப்படுகிறது. **தேசிய உணவுப் பாதுகாப்புத் திட்டம்**: இந்தத் திட்டத்தின் கீழ் 50 சதவீதம் மானியத்தில் உயிர் உரங்கள் வழங்கப்படுகின்றன. வயலுக்கு நீர் கொண்டு செல்லும் குழாய்களும் மானிய விலையில் வழங்கப்படுகின்றன. சூரிய சக்தியில் இயங்கும் பம்பு செட்டுகள் அமைக்க ரூ.3 லட்சத்து 35 ஆயிரத்து 200 முதல் ரூ.3 லட்சத்து 84 ஆயிரத்து 400 வரை மானியம் வழங்கப்படுகிறது. **"அட்மா' திட்டம்**: அட்மா திட்டத்தின்கீழ் விவசாயிகளுக்கு பண்ணைப் பள்ளிகள், திறன் வளர் பயிற்சிகள், விவசாயிகள் கண்டுணர சுற்றுலா, செயல் விளக்கத் திடல் அமைத்து விவசாயிகளுக்குப் பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன. மேலும், இதில் சிறந்த விவசாயி ஒருவரைத் தேர்ந்தெடுத்து அவர்களை ஊக்கப்படுத்தும் வகையில் ரூ.10 ஆயிரம் பரிசாக வழங்கப்படுகிறது. இதுகுறித்து பூந்தமல்லி வேளாண் உதவி இயக்குநர் டி.என்.உமாதேவி தினமணி செய்தியாளரிடம் கூறியது: "பூந்தமல்லி வட்டத்தில் ஆயிரத்து 800 ஹெக்டேர் பரப்பளவில் நெல் பயிரிடப்பட்டு வருகிறது. இதில் 4 ஆயிரம்

ஹெக்டேர் பரப்பளவில் சொர்ணவாரி, சம்பா, நவரை ஆகிய மூன்று பருவங்களில் நெல் சாகுபடி செய்யப்படுகிறது. நெல் தவிர காய்கறிப் பயிர்கள், மலர்கள், சிறிய அளவில் பயறு, நிலக்கடலை பயிரிடப்பட்டு வருகிறது. இந்தப் பகுதியில் உள்ள அனைத்து விவசாயிகளின் நிலத்திலும் மண் மாதிரி எடுக்கப்பட்டு, பரிசோதனை செய்து "ஒருங்கிணைந்த விவசாயிகள் கையேடு' வழங்கப்பட்டு வருகிறது. அரசு வழங்கும் மானியத் திட்டங்களை விவசாயிகள் அந்தந்தப் பகுதிகளில் உள்ள வேளாண்மை உதவி இயக்குநர் அலுவலகத்தில் விண்ணப்பித்து பயன்பெறலாம்' என்றார்.

**<u>தமிழ்நாடு விவசாயிகள் சங்கம் சார்பில் நடை பயண ஊர்வலம்</u>**

சேத்துப்பட்டை அடுத்த தென்பள்ளிபட்டு முதல் கொம்மனந்தல் வரை தமிழ்நாடு விவசாயிகள் சங்கம் சார்பில் நடைபயண ஊர்வலம் வியாழக்கிழமை நடைபெற்றது. மத்திய, மாநில அரசுகளின் விவசாய பொருளாதாரக் கொள்கைகளைக் கண்டித்து தென்விளாப்பாக்கம், வடவிளாப்பாக்கம், சோத்துகன்னி, கொம்மனந்தல் வரை நடை பயண ஊர்வலம் நடைபெற்றது. இந்த ஊர்வலத்தில் விவசாயிகளுக்கும், விவசாயத் தொழிலாளர்களுக்கும் சமூகப் பாதுகாப்பு அட்டை, மருத்துவக் காப்பீடு அட்டை விடுபட்ட அனைவருக்கும் வழங்குதல், கிராமத்தில் 100 நாள் வேலைத் திட்டம் தொடங்குதல், விவசாயிகளுக்கு கூட்டுறவு பயிர் கடன் வழங்கீடு உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி நடைபயணம் நடைபெற்றது. ஊர்வலத்துக்கு சங்கத்தின் கிளைத் தலைவர் காசி தலைமை வகித்தார். மாவட்டச் செயலாளர் சிவக்குமார், பொருளாளர் சிவாஜி உள்ளிட்ட தமிழ்நாடு விவசாயிகள் சங்க உறுப்பினர்கள் கலந்துகொண்டனர்.

**<u>மேட்டூர் அணைக்கு நீர்வரத்து மேலும் அதிகரிப்பு</u>**

மேட்டூர் அணைக்கு நீர்வரத்து வெள்ளிக்கிழமை நொடிக்கு 28 ஆயிரம் கன அடியாக இருந்தது. கடந்த சில நாள்களாக காவிரியின் நீர்ப்பிடிப்புப்

பகுதிகளிலும், காவிரியின் துணை நதிகளான பாலாறு, தொப்பையாறு பகுதிகளிலும் பலத்த மழை பெய்து வருகிறது. இதனால், மேட்டூர் அணைக்கு வரும் நீரின் அளவு படிப்படியாக அதிகரித்து வருகிறது. கடந்த வார இறுதியில் நொடிக்கு 3,500 கன அடி வீதம் வந்து கொண்டிருந்த நீர்வரத்து படிப்படியாக அதிகரித்து வியாழக்கிழமை 19 ஆயிரம் கன அடியாக இருந்தது. இது வெள்ளிக்கிழமை காலை நொடிக்கு 28,042 கன அடியாக அதிகரித்தது. அணையின் நீர்மட்டம் 89.30 அடியாக இருந்தது. அணையிலிருந்து காவிரி டெல்டா பாசனத்துக்கும், கிழக்கு மேற்கு கால்வாய் பாசனத்துக்காகவும் நொடிக்கு 18,679 கன அடி தண்ணீர் திறந்துவிடப்படுகிறது. அணையின் நீர் இருப்பு 51.85 டி.எம்.சியாக இருந்தது. தருமபுரி மாவட்டம், ஒகேனக்கல் காவிரியில் வியாழக்கிழமை நொடிக்கு 25,000 அடியாக இருந்த நீர்வரத்து, வெள்ளிக்கிழமை 26,000 கன அடியாகஅதிகரித்தது.

**<u>நெல்லை மாவட்டத்தில் 2ஆவது நாளாக இடியுடன் மழை</u>**

திருநெல்வேலி மாவட்டத்தில் 2ஆவது நாளாக வெள்ளிக்கிழமை பரவலாக இடியுடன் கூடிய மழை பெய்தது. மழையால் வெப்பம் தணிந்து குளிர்ந்த காற்று வீசியதால் மக்கள் நிம்மதியடைந்தனர். திருநெல்வேலி மாவட்டத்தில் கடந்த சில தினங்களாக வெப்பம் கடுமையாக இருந்தது. இதன் காரணமாக பள்ளி, கல்லூரிக்குச் செல்லும் மாணவர்கள், பணிக்குச் செல்வோர், சாலையோரங்களில் நடைபாதை வியாபாரிகள் என பல தரப்பினரும் பாதிக்கப்பட்டனர். வெப்பத்தைத் தணிக்க குளிர்பானங்களைத் தேடிச் செல்லும் நிலை ஏற்பட்டது. பாபநாசம், மணிமுத்தாறு அருவிகளில் வழக்கத்தைவிட அதிகளவில் சுற்றுலாப் பயணிகளின் வருகை இருந்தது. இதனிடையே, வியாழக்கிழமை இம் மாவட்டத்தில் பரவலாக மழை

பெய்தது. வெள்ளிக்கிழமை காலை நிலவரப்படி நான்குனேரியில் அதிகபட்சம் 80 மி.மீ. மழையும், நம்பியாறு அணையில் 58 மி.மீ. மழையும் பதிவாகியிருந்தது. களக்காட்டில் 28.2, வடக்குப் பச்சையாறு அணையில் 28, கொடுமுடியாறு அணையில் 15, கருப்பாநதி அணையில் 9.5, குண்டாறு அணையில் 2, கடனாநதி அணையில் 4, ராமநதி அணையில் 7, பாபநாசம் அணையில் 5, அம்பாசமுத்திரத்தில் 4.3, செங்கோட்டையில் 4.2, கன்னடியன் அணைக்கட்டில் 1 மி.மீ. மழை பதிவாகியிருந்தது. 2ஆவது நாளாக வெள்ளிக்கிழமை பிற்பகலில் திருநெல்வேலி, மேலப்பாளையம், தருவை, மேலச்செவல், கோபாலசமுத்திரம், பத்தமடை, வீரவநல்லூர், சேரன்மகாதேவி, கல்லிடைக்குறிச்சி, அம்பாசமுத்திரம், விக்கிரமசிங்கபுரம், முக்கூடல் உள்பட பல்வேறு பகுதியில் இடியுடன் மழை பெய்தது. மழையால் வெப்பம் தணிந்து குளிர்ந்த காற்று வீசியதால் மக்கள் மகிழ்ச்சியடைந்தனர். நீர்மட்டம் நிலவரம்: வெள்ளிக்கிழமை பாபநாசம் அணையின் நீர்மட்டம் 78.60 அடியாகவும், சேர்வலாறு அணை நீர்மட்டம் 83.99 அடியாகவும், மணிமுத்தாறு அணை நீர்மட்டம் 55.28 அடியாகவும், கடனாநதி அணை நீர்மட்டம் 61.50 அடியாகவும், ராமநதி அணை நீர்மட்டம் 56.50 அடியாகவும் இருந்தது. பாபநாசம் அணைக்கு விநாடிக்கு 488 கனஅடி நீர்வரத்து இருந்தது. அணையிலிருந்து 905 கனஅடி தண்ணீர் திறந்துவிடப்படுகிறது. மணிமுத்தாறு அணைக்கு 40 கனஅடி நீர்வரத்து இருந்தது. அணையில் பெருங்கால் மதகில் 10 கனஅடி தண்ணீர் திறந்து விடப்பட்டுள்ளது. கருப்பாநதி அணையின் நீர்மட்டம் 36.51 அடியாகவும், குண்டாறு அணை நீர்மட்டம் 36.10 அடியாகவும், அடவிநயினார் அணை நீர்மட்டம் 103.50 அடியாகவும், வடக்குப் பச்சையாறு அணை நீர்மட்டம் 4 அடியாகவும், நம்பியாறு அணை நீர்மட்டம் 8.53 அடியாகவும், கொடுமுடியாறு அணை நீர்மட்டம் 9 அடியாகவும் இருந்தது.

கடனாநதி அணையிலிருந்து 105 கனஅடியும், ராமநதி அணையிலிருந்து 40 கனஅடியும், கருப்பாநதி அணையிலிருந்து 10 கனஅடியும், அடவிநயினார் அணையிலிருந்து 20 கனஅடியும் தண்ணீர் திறந்துவிடப்பட்டுள்ளது. அறுவடை பாதிப்பு: தற்போது தாமிரவருணி பாசனத்தில் மணிமுத்தாறு பெருங்கால் பாசனத்தில் கார் பருவ அறுவடை நடைபெற்று வருகிறது. மழையால் அறுவடை பருவத்தில் உள்ள நெற்பயிர் சாய்ந்து பாதிக்க வாய்ப்புள்ளது. மேலும் இப்பாசனத்தில் தாமதமாக சாகுபடி செய்யப்பட்ட அம்பாசமுத்திரம், சேரன்மகாதேவி, முக்கூடல், கடையம், ஆழ்வார்குறிச்சி உள்ளிட்ட பகுதியில் தற்போது கதிர் வரும் பருவத்தில் நெற்பயிர் இருப்பதால், தொடர்ந்து மழை நீடித்தால் நெற்பயிர் பாதிக்கும் அபாயம் இருப்பதாக விவசாயிகள் தெரிவித்தனர்.

**நவீன விவசாயத்திற்கு புதிய தொழில்நுட்பம் அவசியம்**

நவீன விவசாயத்திற்கு புதிய தொழில்நுட்பங்களை பயன்படுத்துவது அவசியம் என்று, கர்நாடக வேளாண் துறை அமைச்சர் கிருஷ்ண பைரேகௌடா தெரிவித்தார். பெங்களூருவில் வெள்ளிக்கிழமை காஸ் கட்டுமான நிறுவனத்துடன் அப்ரோ ஏஷியா எக்யூப்மென்ட் நிறுவனம் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்து கொண்டது. இதில் கலந்து கொண்டு அவர் பேசியது: விவசாயத்தை பிரதானத் தொழிலாக கொண்டுள்ள நாடுகளில் இந்தியா முதல் இடத்தில் உள்ளது. ஆனால், விவசாயிகள் பழைய விவசாய முறைகளையே பின்பற்றி வருவதால், விவசாயத் துறை வளர்ச்சியில் நாம் பின்தங்கியுள்ளோம். நவீன விவசாயத்திற்கு புதிய தொழில்நுட்பங்களைப் பயன்படுத்துவது அவசியம். புதிய தொழில்நுட்பங்களால் விவசாயத்தில் நாம் தன்னிறைவு அடைய முடியம். விவசாயிகளும் வளர்ச்சி அடைய முடியும் என்றார் அவர். நிகழ்ச்சியில் காஸ் கட்டுமான நிறுவனத்தின்

மேலாண் இயக்குநர் அபிஜித்குப்தா, அப்ரோ ஏஷியா எக்யூப்மென்டின் தேசியத் தலைவர் டி.ஏ.முருகானந்தம் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

**<u>வேளாண் பொருள்களை நுகர்வோரிடம் நேரடியாக விற்பனை செய்ய புதிய மண்டி:</u>**

இடைத்தரகர்கள் இன்றி, சிறு விவசாயிகள் தங்கள் வேளாண் பொருள்களை நேரடியாக நுகர்வோரிடம் விற்பனை செய்யும் வகையில், புதிய வேளாண் மண்டி தில்லியில் அமைகிறது. வட மேற்கு தில்லியில் உள்ள அலிபூரில் அமைய இருக்கும் இந்த மண்டியின் கட்டடத்துக்கு, மத்திய வேளாண்துறை அமைச்சர் ராதா மோகன் சிங், வெள்ளிக்கிழமை அடிக்கல் நாட்டினார். பின்னர் செய்தியாளர்களிடம் ராதா மோகன் சிங் கூறுகையில், "விவசாயிகளை பலப்படுத்தும் முயற்சிகளை நாங்கள் மேற்கொண்டு வருகிறோம். இந்த புதிய வேளாண் மண்டி, அத்தகைய முயற்சிகளின் ஒரு பகுதியாகும். இதன் மூலம் விவசாயிகள், நுகர்வோர் என இருவருமே பயனடைவார்கள்' என்றார். தில்லிக்கு தினசரி 15,000 டன் காய்கறி, பழங்கள் தேவைப்படுகின்றன. சுமார் 1.6 ஏக்கர் பரப்பளவில் அமைய உள்ள இந்த வேளாண் மண்டி, அடுத்த 6 மாதத்தில் முழுமையாக தயாராகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்த வேளாண் மண்டி மூலம், விவசாயிகள் தங்களின் வேளாண் பொருள்களை, ஒருங்கிணைந்த சில்லறை விற்பனையாளர்கள், உணவகங்கள், ஏற்றுமதியாளர்கள், சாதாரண நுகர்வோர்கள் என யாருக்கு வேண்டுமானாலும் மொத்தமாகவும், சில்லறையாகவும் விற்பனை செய்யலாம். அரசின் அங்கமான சிறு விவசாயிகள் வேளாண் வர்த்தக கூட்டமைப்பின் (எஸ்எஃப்ஏசி), விவசாய உற்பத்தியாளர்கள் சங்கம் (எஃப்பிஓ), வளர்ச்சியாளர்கள் சங்கம் (ஜீஏ) ஆகியவற்றில் உறுப்பினர்களாக இருக்கும் விவசாயிகள் நலன் பெறவே இந்த வேளாண் மண்டி அமைக்கப்படுகிறது. இதுகுறித்து எஸ்எஃப்ஏசியின்

நிர்வாக இயக்குநர் பர்வேஷ் சர்மா கூறுகையில், "ஆசாத்பூர் வேளாண் மண்டியைக் காட்டிலும் இது வேறுபட்டது. இங்கு விவசாயிகள் தங்கள் உற்பத்தியின் மாதிரியை வைத்துக் கொள்ளலாம். ஏலம் மூலம் விற்பனையாகும் தனது உற்பத்திப் பொருளை, உற்பத்தி இடத்திலிருந்து நேரடியாக நுகர்வோருக்கு வழங்கலாம்' என்றார். இந்தத் திட்டத்தின் முன்னோட்டமாக, அடிக்கல் நாட்டு விழாவின்போது, தில்லியின் மிகப்பெரிய சில்லறை வர்த்தக நிறுவனமான சஃபலுக்கு, 20 டன்கள் வெங்காயம் விற்பனை செய்யப்பட்டது.

தினமலர்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**<u>மேட்டூர் அணைக்கு நீர்வரத்து28,042 கனஅடியாக அதிகரிப்பு</u>**

மேட்டூர்: தமிழககர்நாடகா எல்லையிலுள்ள, காவிரி நீர்பிடிப்பு பகுதியில் தீவிரம் அடைந்துள்ள வடகிழக்கு பருவமழையால், மேட்டூர் அணையின் நீர்வரத்து, நேற்று வினாடிக்கு, 28 ஆயிரத்து, 42 கனஅடியாக அதிகரித்தது.தென்மேற்கு பருவமழை சீஸன் நிறைவடைந்த நிலையில், தமிழககர்நாடகா எல்லையில் உள்ள காவிரி நீர்பிடிப்பு பகுதியில், வடகிழக்கு பருவமழை தீவிரம் அடைந்துள்ளது. இதனால், கடந்த, 24ம் தேதி வினாடிக்கு, 6,852 கனஅடியாக இருந்த மேட்டூர் அணை நீர்வரத்து, நேற்று முன்தினம், 19 ஆயிரத்து, 131 கனஅடியாகவும், நேற்று, 28 ஆயிரத்து, 42 கனஅடியாகவும், படிப்படியாக அதிகரித்தது.அணையில் இருந்து டெல்டா பாசனத்துக்கு வினாடிக்கு, 18 ஆயிரம் கனஅடி நீர் திறக்கப்பட்டது. பாசன பகுதியில் மழை நீடிப்பதால், வினாடிக்கு, 900 கனஅடியாக இருந்த மேட்டூர்

அணை கால்வாய் நீர் திறப்பு வினாடிக்கு, 600 கனஅடியாக குறைக்கப் பட்டது. நேற்று, அணை நீர்மட்டம், 89.300 அடியாகவும், நீர் இருப்பு, 51.856 டி.எம்.சி.,யாகவும் இருந்தது.மேட்டூர் அணை நீர்மட்டம், ஒன்றரை மாதத்தில், 25 அடியும், நீர் இருப்பு, 30 டி.எம்.சி.,யும் சரிந்த நிலையில், நீரவரத்து அதிகரித்தால், நேற்று அணை நீர்மட்டம், ஒரு அடியும், நீர் இருப்பு ஒரு டி.எம்.சி.,யும் அதிகரித்துள்ளது.

## சம்பா பருவத்துக்கு 1.38 லட்சம் ஹெக்டரில்நெல் சாகுபடி நடக்கும் என எதிர்பார்ப்பு

தஞ்சாவூர்: தஞ்சை மாவட்டத்தில் நடப்பு சம்பா மற்றும் தாளடி பருவத்துக்கு, ஒரு லட்சத்து, 38 ஆயிரத்து, 660 ஹெக்டரில் நெல் சாகுபடி செய்யப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.தஞ்சாவூர் மாவட்ட விவசாயிகள் குறை தீர்க்கும் கூட்டத்தில் கலெக்டர் சுப்பையன் கூறியதாவது,தஞ்சாவூர் மாவட்டத்தில் நடப்பு சம்பா மற்றும் தாளடி பருவத்துக்கு ஒரு லட்சத்து, 38 ஆயிரத்து, 660 ஹெக்டரில் நெல் சாகுபடி செய்யப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. இதுவரை, 19 ஆயிரத்து, 785 ஹெக்டரில் நடவும், 520 ஹெக்டேரில் நேரடி நெல் விதைப்பும் நடந்துள்ளது.சம்பா பருவத்தில் நடவு செய்வதற்காக, 1,670 ஹெக்டரிலும், தாளடி பருவத்துக்காக, 155 ஹெக்டரில் நாற்று அமைக்கப் பட்டுள்ளது. திருந்திய நெல் சாகுபடி முறையில், 83 ஆயிரத்து, 200 ஹெக்டேரில் நெல் சாகுபடி செய்ய இலக்கு நிர்ணயித்து, இதுவரை, 12 ஆயிரத்து, 800 ஹெக்டேரில் நடவு நடந்துள்ளது.சம்பா சாகுபடிக்கு தேவையான நீண்டகால ரகமான சாவித்ரி, மத்திய கால ரகமான பி.பி.டி.,-5.204, சுவர்ணாசப், ஆடுதுறை-38,39,46., கோ-50 ஆகிய தனமான நெல் விதைகள் தேவையான அளவு இருப்பு வைக்கப்பட்டு, வேளாண் விரிவாக்க மையங்கள், கூட்டுறவு சங்கங்கள் மற்றும் தனியார் விற்பனை நிலையங்கள் மூலம் விவசாயிகளுக்கு விற்பனை செய்யப்படுகிறது.இதுவரை 933

மெ.டன்., நெல் விதைகள் விற்பனை நடந்துள்ளது. சம்பா மற்றும் தாளடி பருவத்துக்கு தேவையான யூரியா, 6,958 மெ.டன், டி.ஏ.பி., 1,969 மெ.டன், பொட்டாஷ், 1,138 மெ.டன், காம்ப்ளக்ஸ், 1,741 மெ.டன் இருப்பு வைக்கப்பட்டு, கூட்டுறவு மற்றும் தனியார் விற்பனை நிலையங்கள் மூலம் விற்பனை நடக்கிறது. திருந்திய நெல் சாகுபடி முறையில் அதிக மகசூல் காட்டும் விவசாயிகளுக்கு மாநில அளவில், ஐந்து லட்சம் ரூபாயும், மாவட்ட அளவில், 15 ஆயிரம் ரூபாயும் அரசு சார்பில் ஊக்கத்தொகையாக வழங்கப்படும். மேம்படுத்தப்பட்ட வேளாண் காப்பீட்டு திட்டத்துக்கு பதில் மீண்டும் தேசிய வேளாண் காப்பீட்டு திட்டம் செயல்படுத்தப்படும். மாவட்டத்தில் தற்போது குறுவை பருவத்துக்கான அறுவடை நடந்து வருகிறது. இதுவரை, 14 ஆயிரத்து, 610 ஹெக்டரில் அறுவடை முடிந்துள்ளது என்று அவர் தெரிவித்தார்.

## திருப்புவனத்தில்80.2 மி.மீ., மழை

திருப்புவனம்: திருப்புவனத்தில் நேற்று முன்தினம் 80.2 மி.மீ., மழையளவு பதிவாகியுள்ளது. திருப்புவனம் வட்டாரத்தில் போதிய மழையில்லாததால் விவசாயம் பொய்த்து விட்டது.மழையில்லாததாலும், வைகை ஆற்றில் நீர்வரத்து இல்லாமலும் கிணறுகள் வறண்டு குடிநீருக்கே கடும் தட்டுப்பாடு நிலவியது. வைகையில் தண்ணீர் திறக்க தமிழ்நாடு விவசாயிகள் சங்கம்,கண்மாய் பாசன விவசாயிகள் சங்கம் தமிழக அரசுக்கு கோரிக்கை விடுத்ததையடுத்து வைகை அணையில் இருந்து தண்ணீர் திறக்கப்பட்டது.மதுரையை கடந்து நேற்று காலை திருப்புவனத்தை வந்தடைந்தது. இது தவிர கடந்த மூன்று நாட்களாக திருப்புவனம் வட்டாரத்தில் மாலையில் மழை பெய்தது. 23ம் தேதி 60.6மி.மீ., 24ம் தேதி 80.2 மி.மீ, 25ம் தேதி 8.2 மி.மீ., பதிவாகியுள்ளது. வைகை ஆற்றில் இன்னும்

ஒரு சில தினங்களுக்கு தண்ணீர் செல்லும் வாய்ப்பு இருப்பதால் நிலத்தடி நீர் மட்டம் உயர வாய்ப்பு உள்ளது.

## இன்றைய வேளாண் செய்திகள்

### <u>கோவையில் ரூ.2.17 கோடிக்கு தேயிலைத்தூள் விற்பனை</u>




கோவை: கோவை தேயிலை ஏல மையத்தில் நேற்று ரூ.2.17 கோடிக்கு தேயிலைத்தூள் விற்பனையானது. கோவை தேயிலை ஏல மையத்தில் நேற்று 39வது வார ஏலம் நடந்தது. இதில் தேயிலைத்தூள் உள்ளூர் ரகம் (டஸ்ட்) 2.44 லட்சம் கிலோ விற்பனைக்கு வந்தது. இதில் 1.86 லட்சம் கிலோ தேயிலையை வர்த்தகர்கள் கொள்முதல் செய்தனர். சராசரியாக விற்பனை விலை கிலோ ரூ.81.36 ஆக இருந்தது. இதன் மூலம் ரூ.1.51 கோடிக்கு வர்த்தக நடந்தது. ஏற்றுமதி ரகம் (லீப்) 1.32 லட்சம் கிலோ விற்பனைக்கு வந்ததில் 94 ஆயிரம் கிலோ விற்பனையானது. சராசரியாக ஒரு கிலோ ரூ.70.29க்கு ஏலம் எடுத்தனர். இதில் ^66 லட்சத்திற்கு பரிவர்த்தனை நடந்தது.கடந்த வார விற்பனை விலையோடு ஒப்பிடுகையில்,

‘உள்ளூர் ரகம் கிலோவுக்கு ரூ.4 அதிகரித்துள்ளது. ஏற்றுமதி ரகம் ரூ.3.56 குறைந்துள்ளது. மொத்தத்தில் உள்ளூர் மற்றும் ஏற்றுமதி ரக தேயிலைத்தூள் இந்த வாரம் ரூ.2.17 கோடிக்கு விற்றுள்ளது. இது கடந்த வாரத்தை காட்டிலும் ரூ.33 லட்சம் குறைவாகும் என்று ஏல மையத்தினர் தெரிவித்தனர்.

**கூட்டுறவு சங்கங்கள் மூலம் நெல் கொள்முதல் தீவிரம்**



ரெய்பூர்: சத்தீஷ்கர் மாநிலத்தில் நடப்பு காரீப் (2014-2015) பருவத்தில் அறுவடை செய்யப்படும் நெல்லை அரசு நிர்ணயத்துள்ள குறைந்த பட்ச ஆதார விலைக்கு விற்பதற்காக 7 லட்சம் விவசாயிகள் தங்களது பெயரை பதிவு செய்துள்ளனர். மாநிலம் முழுவதும் உள்ள 1,287 கூட்டுறவு சங்கங்கள் மூலம் இதற்கான விண்ணப்பங்களை விவசாயிகள் சமர்ப்பித்துள்ளனர். இந்த தகவலை அந்த மாநில அரசு நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது. பாரம்பரிய உணவு திருவிழா சிறுதானிய வகைகளை சாப்பிட்டால் உடல் ஆரோக்கியமாக இருக்கும் திருவண்ணாமலை, : சிறுதானிய உணவு வகைகளை சாப்பிட்டால் உடல் ஆரோக்கியமாக இருக்கும் என்று திருவண்ணாமலையில் நடந்த பாரம்பரிய உணவு திருவிழாவில் பேசிய அமைச்சர் அக்ரி எஸ்.எஸ்.கிருஷ்ணமூர்த்தி கூறினார். திருவண்ணாமலை மாவட்ட ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப்பணிகள் திட்டம் சார்பில் திருவண்ணாமலையில் ஒருவாரம் பாரம்பரிய உணவுத் திருவிழா கொண்டாடப்படுகிறது. இதன் தொடக்க விழா நேற்று மாலை திருவண்ணாமலையில் நடந்தது. விழாவுக்கு கலெக்டர் ஞானசேகரன்

தலைமை தாங்கி னார். ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி பணிகள் திட்ட மாவட்ட அலுவலர் சி.சுசீலா வரவேற்றார். விழாவில் அமைச்சர் அக்ரி எஸ்.எஸ்.கிருஷ்ணமூர்த்தி கலந்து கொண்டு விழாவை குத்துவிளக்கேற்றி தொடங்கி வைத்து, உணவு கையேடு வழங்கி பேசியதாவது: நமது உடலுக்கு அதிக சக்தி தருபவை சிறுதானியங்கள்தான். அதை கருத்தில் கொண்டுதான் நமது முன்னோர்கள் சிறுதானியங்களை பயிர் செய்தார்கள். அதனால் அவர்கள் உடல் சோர்வின்றி உழைத்தார்கள். ஆனால் இன்று சிறுதானியங்களை நாம் தீண்ட தகாத பொருளாகவே பார்க்கிறோம். டப்பாவில் அடைத்து சாப்பிடும் உணவு துப்பாக்கி போன்ற கொலை கருவிக்கு சமம். இன்றைக்கு 70 சதவீதம் பெண்கள் உடல் எடை குறைவாக உள்ளனர். 50 சதவீத குழந்தைகள் எடை குறைவாக பிறக்கின்றன. 70 சதவீதம் பேர் ரத்தசோகை நோயினால் பாதிக்கப்பட்டுள்ளனர். சிறுதானியம் போன்ற சத்தான உணவு சாப்பிடாததே இதற்கு காரணம். கேழ்வரகு கூழ் சாப்பிடுவதை கேவலமாக பார்க்கிறார்கள். கிராமங்களில் இருந்து நகரங்களுக்கு வந்தவர்கள் கூட சிறுதானியத்தை மறந்து விட்டார்கள். சிறுதானியங்கள் பசியை மட்டுமின்றி சத்து தேவையையும் பூர்த்தி செய்கிறது. பாரம்பரிய உணவை சாப்பிட்டால் பசி தீரும். உடல் ஆரோக்கியமாக இருக்கும். இவ்வாறு அவர் பேசினார். விழாவில் எம்எல்ஏக்கள் டி.சுரேஷ்குமார், எல்.ஜெயசுதா, மாவட்ட ஊராட்சிக் குழு தலைவர் எம்.எஸ்.நைனா கண்ணு, நகராட்சி தலைவர் என்.பாலச்சந்தர், மாவட்ட சமூக நல அலுவலர் செ.உமையாள் உள்பட பலர் கலந்து கொண்டனர். முடிவில் மாவட்ட ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி பணிகள் திட்ட புள்ளியியல் ஆய்வாளர் மா.சுப்பிரமணியன் நன்றி கூறினார். விழாவை பிஆர்ஓ தேச.கலையரசன் தொகுத்து வழங்கினார். இந்த பாரம்பரிய உணவு திருவிழா வருகிற 1ம் தேதி தினமும் மாலை 3 மணி முதல்

6 மணி வரை நடைபெறுகிறது. இங்கு கம்பு, கேழ்வரகு, சோளம், தினை, சாமை, குதிரைவாலி போன்ற சிறுதானியங்களால் செய்யப்பட்ட உணவு வகைகள் குறைந்த விலையில் விற்பனை செய்கிறார்கள். அமைச்சர் அக்ரி கிருஷ்ணமூர்த்தி பேச்சு திருவண்ணாமலையில் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி பணிகள் திட்ட துறை சார்பில் நடந்த பாரம்பரிய உணவு திருவிழாவில் சிறுதானிய உணவுகளை சிறப்பாக தயாரித்த பணியாளருக்கு வேளாண்மை துறை அமைச்சர் அக்ரி.எஸ்.எஸ்.கிருஷ்ணமூர்த்தி பரிசு வழங்கினார். உடன், கலெக்டர் ஞானசேகரன், எம்எல்ஏக்கள் எல்.ஜெயசுதா, டி.சுரேஷ்குமார். மாவட்ட ஊராட்சித்தலைவர் எம்.எஸ்.நைனாக்கண்ணு.

## <u>க.பரமத்தி பகுதியில் மானாவாரி சாகுபடி பணிகள் மும்முரம்</u>

க.பரமத்தி, : க.பரமத்தி ஒன்றிய பகுதியில் பருவமழையை நம்பி மானாவாரி விவசாயிகள் விதைப்பு பணிகளை மும்முரமாக செயல்படுத்தி வருகின்றனர். க.பரமத்தி ஒன்றியத்தில் அணைப்பாளையம், அஞ்சூர், ஆரியூர், அத்திப்பாளையம், சின்னதாராபுரம், எலவனூர், கூடலூர் கிழக்கு, கூடலூர் மேற்கு, கார்வழி, காருடையம்பாளையம், கோடந்தூர், குப்பம், மொஞ்சனூர், முன்னூர், புஞ்சைகாளகுறிச்சி, நடந்தை, நெடுங்கூர், க.பரமத்தி, பவித்திரம், நஞ்சைகாளகுறிச்சி, புன்னம், ராஜபுரம், சூடாமணி, தென்னிலை கிழக்கு, தென்னிலை மேற்கு, தென்னிலை தெற்கு, தொக்குப்பட்டி, துக்காச்சி, தும்பிவாடி, விஸ்வநாதபுரி, ஆகிய 30ஊராட்சிகள் உள்ளன. அனைத்து கிராம பகுதிகளிலும் கடந்த 10 ஆண்டுகளுக்கு முன்பு விவசாயிகள் ஆடிப்பட்டம் தேடி விதைத்து அமோகமாக விளைச்சல் செய்து லாபம் கண்டனர். தற்போது, அந்த நிலைமாறி வாங்கிய கடனுக்கு வட்டி கட்ட முடியாத நிலையில் விவசாய இழப்பீடுகள் குறித்த அரசின் அறிவிப்பை எதிர்பார்த்து காத்திருப்பதுமே வாடிக்கையாகி விட்டது. இந்நிலையில் இந் தாண்டு பருவமழையால் கடந்த

இரு தினங்களாக பெய்த மழையை நம்பி க.பரமத்தி ஒன்றிய பகுதியில் விவசாய பணிகளை துவங்கியுள்ளனர். பொதுவாக விவசாயத்தில் பருவநிலை மாற்றத்தால் ஆடிப்பட்டம் மாறிப்போய், ஆவணிப்பட்டமும் போதிய மழை இல்லாததால் ஆட்டம் கண்டுள்ளது. தற்போது புரட்டாசி பட்டம் நடைமுறையில் நிற்கிறது. ஏனெனில் விவசாயத்திற்கு தேவையான பருவமழை எப்போதும் புரட்டாசி 2வது வாரத்தில் பெய்ய துவங்குவது வழக்கம் இதனால் விதைப்பு பணிகளை துவங்கியதாக விவசாயிகள் கூறுகின்றனர். எனவே, புரட்டாசி பட்டத்தை எதிர்பார்த்து தற்போதே விவசாயத்தின் ஆரம்பக்கட்ட பணிகளை துவங்கி செய்து வருகின்றனர். ஏற்கனவே அறு வடை செய்த பின்னர் காய்ந்து போன நிலத்தை விவசாயத்திற்கு பயன் படும் அளவில் பதப்படுத்தும் வேலைகளை சிலர் செய்து வருகின்றனர். ஒரு சிலர் கால்நடைகளுக்காக சோளம், கம்பு போன்ற பயிர்களுக்காக விதைப்பு செய்து அவற்றை டிராக்டரை கொண்டு உழவு பணிகளை மும்முரமாக செய்து வருகின்றனர். மொத்தத்தில் பருவமழையை நம்பி க.பரமத்தி ஒன்றிய பகுதி விவசாயிகள் நிலத்தை பதப்படுத்தும் பணிகளை துவக்கி மும்முரமாகக செய்து வருகின்றனர்.

**<u>தேவையின்றி பூச்சிக் கொல்லி மருந்துகளை பயன்படுத்த வேண்டாம்</u>**

மயிலாடுதுறை, : பொருளாதார சேத நிலை யை கடந்தால் மட்டுமே பயிர் பாதுகாப்பு மருந்து களை பயன்படுத்த வே ண்டும் என்று வேளாண்மை உதவி அலுவலர் அறிவுறுத்தியுள்ளார். மயிலாடுதுறை வேளா ண்மை உதவி அலுவலர் விவசாயிகளுக்கு விடுத்துள்ள செய்திக்குறிப்பில் தெரிவித்திருப் பதாவது: மயிலாடுதுறை வட்டாரத்தில் நடப்பு சம்பா, தாளடி பருவத்தில் விவசாயிகள் சாகுபடி செய்வதற்காக விதை கிராம திட்டத்தின்கீழ ஆடுதுறை 38, சம்பா மசூரி, என்எல்ஆர், ஆடுதுறை 44 ஆகி நெல்ரகங்கள் 50% மான்ய விலையில் மயிலாடுதுறை வட்டார வேளாண் மை விரிவாக்க மையங்ங்ளில் கிடைக்கிறது. அப்பகுதி உதவி வேளாண்மை அலுவலரை அணுகி

பயன்பெறலாம். மேலும் விவசாயிகள் நடப்பு சம்பா, தாளடி நாற்றங்கால் மற்றும் நடவு வயல்களில் பூச்சிநோய் தாக்குதல் பொருளாதார சேத நிலை யை கடந்தால் மட்டுமே பயிர் பாதுகாப்பு மருந்து களை பயன்படுத்த வேண்டும். விவசாயிகள் சம்பா,தாளடி பருவத்தில் திருந்திய நெல் சாகுபடி தொழில் நுட்பத்தை கையாண்டு அதிக மகசூல் பெறலாம். தற்பொழுது வேளாண்மை விரிவாக்க மையங்களில் இருப்பு வைக்கப்பட்டுள்ள திரவ அசோஸ்பைரில்லம், திரவ பாஸ்போபேக்டீரியா திரவ அசோஸ்பைரில்லம், திரவ பார்ஸபோபேக்டீரியா ஆகிய உயிர் உரங்கள்விவசாயிகள் வாங்கி பயனடையலாம். சம்பா மற்றும் தாளடி பருவ சாகுபடிக்கு விவசாயிகள் வாளிப்பான நாற்றுக்களை விதை நேர்த்தி செய்து பயன்படுத்துவது மிக அவசியம். சம்பா பருவ சாகுபடியில் நாற்றுவிடும் பணியில் விவசாயிகள் தற்போது தீவிரமாக ஈடுபட்டுள்ளனர். விதை நேர்த்தி செய்வதன் மூலம் வாளிப்பான நோயற்ற நாற்றுகளை பெறமுடியும். விதைப்பதற்கு முன்பு விதை யை மாலைநேர வெயிலில் இரண்டு மணி நேரம் உலர்த்தி பின்னர் மூட்டை யில் சேகரித்து விதைப்பதற்கு அரைமணிநேரத்திற்கு முன்பு சூடோ மோனாஸ் புளோரோசன்ஸ் என்ற நன்மை செய்யும் பாக்டீரியா வை ஒரு கிலோ விதைக்கு 10 கிராம் ,என்ற அளவில் கலந்து விதை நேர்த்தி செய்யவேண்டும். இவ்வாறு செய்தால் இளம் பயிரில் விதைமூலம் பரவும் நோயை கட்டுப்படுத்த முடியும். நுண்ணுயிர் நேர்த்தி ஒரு ஏக்கருக்கு தேவையான நெல் விதையுடன் ஒரு பொட்டலம் அசோஸ்பைரில்லம், ஒரு பொட்டலம் பாஸ்போ பேக்டீரியா நுண்ணுயிர் உரத்தினை விதையுடன் ஊற வைக்கும் தண்ணீரில் கலந்து விதை நேர்த்தி செய்யவேண்டும். மேற்கண்டவாறு விதை நேர்த்தியினை விவசாயிகள் கையாண்டு அதிக மகசூல் பெற்று பயனடையலாம். இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

## <u>பொறையார் அருகே விதை கிராம திட்டத்தில் விவசாயிகளுக்கு பயிற்சி</u>

தரங்கம்பாடி,: பொறையார் அருகே திருவிளையாட்டம் கிராமத்தில் விதை கிராம திட்டத்தில் 100 விவசாயிகளுக்கு பயிற்சி அளிக்கப்பட்டது. பயிற்சி

முகாமிற்கு ஒன்றிய குழு உறுப்பினர் விஜயலெட்சுமி லெட்சுமிபதி தலைமை வகித்தார். செம்பனார்கோயில் வட் டார வேளாண் அலுவலர் கனகம் வரவேற்றார். செம்பனார்கோயில் வட்டார வேளாண் உதவி இயக்குனர் வெற்றிவேலன் விதை உற்பத்தி தொழில்நுட்பங்கள், வல்லூநர்விதை, ஆதாரவிதை, சான்றுவிதை தொடர்பான அனைத்து தொழில் நுட்பங்கள் உயிர் உரங்களின் பயன்பாடு, இயற்கை உரங்களின் நன் மைகள், தரமான நாற்றுகள் உற்பத்தி, விதைநேத்தி, மருத்துவ பயன்பாடு, நடவு வயல் தயாரிப்பு, நீர் நிர்வாகம், களைக்கட்டுபாடு, பூச்சிநோய் கட்டுப்பாடு உள்ளிட்டவை குறித்து விவசாயிகளுக்கு விளக்கினார். பாரம்பரிய நெல் ரகங்கள் குறித்து துணை வேளாண் அலுவலர் கண்ணன் விளக்கினார். விவசாயத்துக்கு தேவையான மண் பரிசோ தனை குறித்தும் உரம் இடும் முறை குறித்தும் வேளாண் அலுவலர் கனகம் விளக்கினார். முன்னோடிகள் விவசாயிகள் துரைராஜ், ஜோதி, பாண்டியன் ஆகியோர் சொர்ணாசப் நெல் சாகுபடி குறித்து விளக்கினர். பயிற்சி முகாமில் பயிர்சாகுபடி குறித்து விவசாயிகளின் கேள்விகளுக்கு பதில் அளிக்கப்பட்டது. உதவி வேளாண் அலுவலர்கள் உதயசூரியன், கலையரசன், பிரபாகரன், ஆட்மா திட்ட தொழில்நுட்ப அலுவலர் பார்த்திபன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். உதவி வேளான் அலுவலர் ரவிச்சந்திரன் நன்றி கூறினார்.

## அரியலூர் மாவட்டத்தில் இன்று கால்நடைகளுக்கு இலவச குடற்புழு நீக்க முகாம்

அரியலூர், : அரிய லூர் மாவட்டத்தில் கறவை பசுக்கள், வெள்ளாடுகள், செம்மறி ஆடுகளுக்கான இனப்பெருக்க மருத்துவ பரிசோதனை மற்றும் குட ற்புழு நீக்க முகாம் இன்று (27ம்தேதி) நடை பெற உள்ளது என அரிய லூர் கலெக்டர் சரவணவேல் ராஜ் தெரிவித்துள்ளார். ஒரு அறிக்கையில் கலெக்டர் தெரிவித்துள்ளதாவது: விலையில்லா கறவை பசுக்கள்,

வெள்ளாடுகள், செம்மறி ஆடுகள் வழங்கும் திட்டங்கள் மூலம் வழங்கப்பட்ட கறவை பசுக்களின் பால் உற்பத்தித் திறனை பெருக்கவும், வெள்ளாடுகள், செம்மறி ஆடுகளின் எடையினை அதிகரிக் கவும், தமிழகம் முழுவதும் இன்று (27ம் தேதி) முதல் கறவைப் பசுக்களுக்கு, இனப்பெருக்க மருத்துவ பரிசோதனையும், வெள் ளாடு, செம்மறி ஆடுகளுக்கு குடற்புழு நீக்க முகாமும் நடைபெற உள்ளது. இம்முகாமில், விலையில்லா கறவை பசுக்கள் மற்றும் வெள்ளாடுகள், செம்மறி ஆடுகள் வழங்கும் திட்டங்களின் மூலம் பயன்பெற்ற பயனாளிகள் மட்டும் அல்லாமல் அனைத்து விவசாயிகளும் கலந்துகொண்டு இந்த அரிய வாய்ப்பை பயன்படுத்திக் கொள்ளுமாறு கலெக்டர் சரவணவேல்ராஜ் தெரிவித்துள்ளார்.

**<u>வேளாண் அலுவலர்களின் தொழில்நுட்ப ஆலோசனைகளை விவசாயிகள் கடைப்பிடிக்க வேண்டும்கலெக்டர் வேண்டுகோள்</u>**

பெரம்பலூர், : வேளாண்மைத்துறை அலுவலர்களின் தொழில் நுட்ப ஆலோனைகளை விவசாயிகள் கடைப்பிடிக்க வேண்டும் என விவசாயி களுக்கு கலெக்டர் தரேஸ் அகமது வேண்டுகோள் விடுத்துள்ளார். பெரம்பலூர் மாவட்டத்தில் வேளாண்மைத்துறைமூலம் பருத்தி சாகுபடியில் ஒரு ஹெக்டேரில் ரூ.1.25 லட்சம் வருமானம் ஈட்டவும், மக்கோள சாகுபடியில் ஒரு ஹெக்டேரில் ரூ.1 லட்சம் வருமானம் ஈட்டவும் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்கீழ் விவசாயிகளுக்கு ரூ.5 ஆயிரம் மதிப்பீட்டில் விதை நேர்த்தி செய்து, மருந்து, உயிர் உரம், நுண்ணுரம், களைக்கொல்லி மருந்து, உயிரியல் பூஞ்சானக் கொல்லி மருந்து, பூச்சி மற்றும் நோய் மருந்து, ஊடுபயிராக பயிரிட பயிறுவகை பயிர் விதைகள் வழங்கப்படுகின்றன. இத்திட்டத்தின்கீழ் பருத்தி சாகுபடிசெய்ய 1 விவசாயிக்கு 1 ஹெக்டேர் வீதம் பெரம்பலூர் வட்டாரத்தில் 200 விவசாயிகளும், ஆலத்தூர் வட்டாரத்தில் 250 விவசாயிகளும், வேப்பூர் வட்டாரத்தில் 275 விவசாயிகளும், வேப்பந்தட்டை வட்டாரத்தில் 275

விவசாயிகளும் என மொத்தம் 1,000 விவசாயிகளின் 1,000 ஹெக்டேர் பரப்பளவில் பருத்தி சாகுபடி செய்யப்பட்டு வருகிறது. இதேபோல, மக்காச்சோளம் சாகுபடி செய்ய 1 விவசாயிக்கு 1 ஹெக்டேர் வீதம் பெரம்பலூர் வட்டாரத்தில் 210 விவசாயிகளும், ஆலத்தூர் வட்டாரத்தில் 250 விவசாயிகளும், வேப்பூர் வட்டாரத்தில் 280 விவசாயிகளும், வேப்பந்தட்டை வட்டாரத்தில் 260 விவசாயிகளும் என மொத்தம் 1,000 விவசாயிகளின் 1,000 ஹெக்டேர் பரப்பளவில் மக்காச்சோளம் சாகுபடி செய்யப்பட்டு வருகிறது.இந்தத் திட்டங்களின்கீழ் சாகுபடி மேற்கொண்ட, வேப்பந்தட்டை விவசாயி மனோ கரன் என்பவரது பருத்தி வயலையும், மற்றொரு விவசாயியான சேகர் என்பவரது மக் காச்சோள வயலையும் நேற்று பெரம்பலூர் மாவட் டக் கலெக்டர் தரேஸ் அகமது நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார். அப்போது பயிரிலுள்ள இலைகளின் எண்ணிக்கைக்கு ஏற்ப பயிரின் வளர்ச்சித்தன்மையை சோதனை செய்தார். வய லின் மண் மாதிரி அறிக்கை பெறப்பட்டுள்ளதா என்றும், வயலின் ஈரப்பதம் மற்றும் மண்வளத் தரத்தினை சோதித்தார். பிறகு கிருஷ்ணாபுரத்தில் செல்லப்பிள்ளை என்பவரது மக்காச் சோள வயல், செல்லதுரை என்பவரது பருத்தி வயல்களை பார்வையிட்டு, வேப்பந்தட்டை பருத்தி ஆராய்ச்சி நிலையத்தால் வழங்கப்பட்ட உயிரியல் காரணியான பிபிஎப்எம் கரைசலை தண்ணீருடன் கலந்து தெளிக்கும் செயல் விளக்கத்தினை பார்வையிட்டார். மேலும் அனுக்கூர் கிராமத்தில் விவசாயிகள் ராஜேந்திரன், துரைசாமி ஆகியோரது பருத்தி வயல்களை பார்வையிட்டு ரூ.1.25 லட்சம் வருமான இலக்கினை அடைய வேளாண்மைத்துறை அலுவலர்கள் அவ்வப்போது வழங்கும் தொழில் நுட்ப ஆலோச னைகளை தொடர்ந்து கடைப்பிடிக்குமாறு அறிவுறுத்தினார். கலெக்டரின் இந்த ஆய்வின் போது பெரம்பலூர் மாவட்ட வேளாண்மைத்துறை இணை இயக்குநர் அழகிரிசாமி, பருத்தி ஆராய்ச்சி

நிலைய தலைவர் கவிமணி, துணை இயக்குநர் (வேளாண் வணிகம் மற்றும் விற்பனைத்துறை) சுப்பிரமணி, வேப்பந்தட்டை வட்டார வேளாண்மை அலுவலர் பிரேமாவதி மற்றும் உதவி வேளாண்மை அலுவலர்கள் விவசாயிகள் கலந்து கொண்டனர்.

**<u>நடப்பு சம்பா பருவத்தில் திருந்திய நெல் சாகுபடி முறையில் 83,200 எக்டேரில் நடவு செய்ய இலக்கு விவசாயிகள் குறைதீர் கூட்டத்தில் தகவல்</u>**

தஞ்சை, : நடப்பு சம்பா பருவத்துக்கு 83,200 எக்டேர் பரப்பில் திருந்திய நெல் சாகுபடி முறையில் நடவு செய்ய இலக்கு நிர்ண யம் செய்யப்பட்டுள்ளது என்று கலெக்டர் சுப்பையன் தெரிவித்துள்ளார். தஞ்சை மாவட்ட விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் கலெக்டர் அலுவலகத்தில் நேற்று நடந்தது. இதில் கலெக்டர் சுப்பையன் தலைமை வகித்துபேசியதாவது: தஞ்சை மாவட்டத்தில் 2014-15ம் ஆண்டு சம்பா மற்றும் தாளடி பருவத்துக்கு 1,38,660 எக்டர் நிலப்பரப்பில் நெல் சாகுபடி செய்ய திட்டமிடப்பட்டு 19,785 எக்டரில் நிலப்பரப்பில் நெல் நடவும், நேரடி விதைப்பு 520 எக்டேர் பரப்பிலும் என்று 20,305 எக்டே ரில் நெல் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. சம்பா பருவத்துக்கான நாற்றங்கால் 1,670 எக்டேர் பரப்பிலும், தாளடி பருவத்துக்கான நாற்றங்கால் 155 எக்டர் பரப்பிலும் அமைக்கப்பட்டுள்ளது. நடப்பு சம்பா பருவத்து க்கு 83,200 எக்டேர் பரப்பில் திருந்திய நெல் சாகுபடி முறையில் நடவுசெய்ய இலக்கு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. இதில் 12,800 எக்டேர் நிலப்பரப்பில் நடவு செய்யப்பட்டுள்ளது. வேளாண் விரிவாக்க மைய த்தில் 933 மெட்ரிக் டன் நெல் வினியோகம் செய்யப்பட்டு 108 மெட்ரிக் டன் இருப்பு வைக்கப்பட்டுள்ளது. தனியார் மற்றும் கூட் டுறவு தொடக்க வேளாண்மை சங்கங்களில் 980 மெட்ரிக் டன் அளவுக்கு விற்பனை செய்யப்பட்டு 325 மெட்ரிக் டன் விதை இருப்பு வைக்கப்பட்டுள் ளது. தேசிய உணவு பாது

காப்பு திட்டம் ரூ.482 லட்சத்தில் செயல்படுத்தப் படவுள்ளது. இத்திட்டத்தின்கீழ் 10 ஆண்டுகளுக்கு உட்பட்ட நெல் ரகங்களுக்கு கிலோ வுக்கு ரூ.10 மானியம் வீதம் 1,200 மெட்ரிக் டன்களுக்கு வழங்கப்படும். வீரிய ஒட்டுரக நெல் விதைகளுக்கு கிலோவுக்கு ரூ.50 மானியம் வீதம் 6 மெட்ரிக் டன் வழங்கப்படும். மாவட்டத்தில் யூரியா 6,958 மெட்ரிக் டன், டிஏபி 1969 மெட்ரிக் டன், பொட்டாஷ் 1,138 மெட்ரிக் டன், காம்ப்ளக்ஸ் 1,741 மெட்ரிக் டன் னும் அனை த்து தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கங்கள் மற்றும் தனியார் விற்பனை நிலையங்களில் இருப்பு வைக்கப்பட்டுள்ளது என்றார்.இதைதொடர்ந்து விவசாயிகள் பேசியதாவது:

ரவிச்சந்தர்: குறைந்த இழப் பீடு, அதிக கட்டணம் என் பதை அடிப்படையாக கொண்ட புதிய தேசிய வேளாண் காப்பீட்டு திட் டத்தை அமல்படுத்த வேண் டாம். பழைய காப்பீட்டு திட்டமே தொடரும் என்று அறிவித்த முதல்வர் ஜெயலலிதாவுக்கு நன்றி தெரிவித்து கொள்கிறேன். சாகுபடி செய்யும் விவசாயிகள் பயிர்கள் காப்பீட்டு தொகை ஒவ்வொரு விவசாயிகளுக்கும் வழங்க வேண்டும். சந்திரன்: பட்டுக்கோட்டை பொதுப்பணித் துறை கல்லணை கால்வாய் வான்வெளி செய்தி நிலையம் அமைப்பத்தில் பல கோடி முறைகேடு நடந்துள்ளது. அங்கு மாவட்ட நிர்வாகம் சென்று ஆய்வு நடத்த வேண்டும் என்றார். கூட்டத்தில் டிஆர்ஓ சந்திரசேகரன், வேளாண் இணை இயக்குனர் சேகர் மற்றும் பலர் உடனிருந்தனர். விவசாயிகளுக்கு பரிசு கலெக்டர் சுப்பையன் பேசுகையில், நெல் பயிரில் அதிக விளைச்சல் எடுக்க ஊக்குவிக்கும் வகையில் மாவட்ட அளவில் உயர் விளைச்சல் பெறும் விவசாயிக்கு ரூ.15 ஆயிரம், இரண்டாம் பரிசாக ரூ.10 ஆயிரமும் வழங்கப்படும். திருந்திய நெல் சாகுபடி முறையில் சாகுபடி செய்து உயர் விளைச்சல் எடுக்கும் விவசாயிகளுக்கு மாநில அளவில் ரூ.5 லட்சம் வழங்கப்படும். மாவட்டத்தில் 5 லட்சத்து 20 ஆயிரம் மெட்ரிக் டன் நெல் கொள்முதல் செய்ய இலக்கு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. 2013

அக்டோபர் மாதம் 1ம் தேதி முதல் இந்த மாதம் 15ம் தேதி வரை 3 லட்சத்து 1 ஆயிரத்து 932 மெட்ரிக் டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. இதில் சிறப்பு கொள்முதல் குழு வாயிலாக 6,486 மெட்ரிக் டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது என்றார். 40 மாதமாகியும் பணி துவங்கவில்லை விவசாயி ராமநாதன் பேசுகையில்: அறிஞர் அண்ணா சர்க்கலை ஆலை நோய் வாய்ப்பட்டு இருந்ததை பல வகை போராட்டத்திற்கு பின் மீட்கப்பட்டது. மீட்கப்பட்ட ஆலை தொடர்ந்து நல்ல நிலையில் இயங்க வேண்டும் என்பதற்காக இணை மின் நிலையம் அமைக்க விவசாயிகள் பங்காக ரூ.10 கோடிக்கு மேல் பங்கு மூலதனமாக கொடுத்துள்ளனர். இதன் அடிப்படையில் 18 மாத காலக்கெடுவில் இணை மின் நிலையம் ஆரம்பிப்பது என்று நாகை,: நாகை மாவட்டத்தில் இன்று கால்நடைகளுக்கு பரிசோ தனை முகாம் நடைபெறுகிறது. இலவச கறவை மாடுகள் மற்றும் வெள்ளாடுகள் வழங்கும் திட்டம் மூலம் வழங்கப்பட்ட கறவைப் பசுக்களின் பால் உற்பத்தித்திறனை பெருக்கவும், வெள்ளாடுகளின் எடையை அதிகரிக்கவும் நாகை மாவட்டத்தில் உள்ள அனைத்து ஊராட்சிகளிலும் இன்று 27ம் தேதி கறவைப் பசுக்களுக்கு இனப்பெருக்க மருத்துவ பரிசோதனையும், வெள்ளாடுகளுக்கு குடற்புழு நீக்க முகாம் நடைபெற உள்ளது. இந்த முகாம்களில் இலவச கறவைப் பசுக்கள் மற்றும் வெள்ளாடுகள் பெற பயனாளிகள் மட்டுமின்றி அனைத்து விவசாயிகளும் தங்கள் கால்நடைகளை கொண்டு வந்து பயன்பெறலாம் என்று கலெக்டர் முனுசாமி வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

மாதங்கள் ஆகியும் பணிகள் துவங்காமல் உள்ளது என்றார்.

## இன்று கால்நடைகளுக்கு பரிசோதனை முகாம்

நாகை,: நாகை மாவட்டத்தில் இன்று கால்நடைகளுக்கு பரிசோ தனை முகாம் நடைபெறுகிறது. இலவச கறவை மாடுகள் மற்றும் வெள்ளாடுகள் வழங்கும் திட்டம் மூலம் வழங்கப்பட்ட கறவைப் பசுக்களின் பால்

உற்பத்தித்திறனை பெருக்கவும், வெள்ளாடுகளின் எடையை அதிகரிக்கவும் நாகை மாவட்டத்தில் உள்ள அனைத்து ஊராட்சிகளிலும் இன்று 27ம் தேதி கறவைப் பசுக்களுக்கு இனப்பெருக்க மருத்துவ பரிசோதனையும், வெள்ளாடு களுக்கு குடற்புழு நீக்க முகாம் நடைபெற உள்ளது. இந்த முகாம்களில் இலவச கறவைப் பசுக்கள் மற்றும் வெள்ளாடுகள் பெற பயனாளிகள் மட்டுமின்றி அனைத்து விவசாயிகளும் தங்கள் கால்நடைகளை கொண்டு வந்து பயன்பெறலாம் என்று கலெக்டர் முனுசாமி வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

**<u>க.பரமத்தி பகுதியில் மானாவாரி சாகுபடி பணிகள் மும்முரம்</u>**

க.பரமத்தி, : க.பரமத்தி ஒன்றிய பகுதியில் பருவமழையை நம்பி மானாவாரி விவசாயிகள் விதைப்பு பணிகளை மும்முரமாக செயல்படுத்தி வருகின்றனர். க.பரமத்தி ஒன்றியத்தில் அணைப்பாளையம், அஞ்சூர், ஆரியூர், அத்திப்பாளையம், சின்னதாராபுரம், எலவனூர், கூடலூர் கிழக்கு, கூடலூர் மேற்கு, கார்வழி, காருடையம்பாளையம், கோடந்தூர், குப்பம், மொஞ்சனூர், முன்னூர், புஞ்சைகாளகுறிச்சி, நடந்தை, நெடுங்கூர், க.பரமத்தி, பவித்திரம், நஞ்சைகாளகுறிச்சி, புன்னம், ராஜபுரம், சூடாமணி, தென்னிலை கிழக்கு, தென்னிலை மேற்கு, தென்னிலை தெற்கு, தொக்குப்பட்டி, துக்காச்சி, தும்பிவாடி, விஸ்வநாதபுரி, ஆகிய 30ஊராட்சிகள் உள்ளன. அனைத்து கிராம பகுதிகளிலும் கடந்த 10 ஆண்டுகளுக்கு முன்பு விவசாயிகள் ஆடிப்பட்டம் தேடி விதைத்து அமோகமாக விளைச்சல் செய்து லாபம் கண்டனர். தற்போது, அந்த நிலைமாறி வாங்கிய கடனுக்கு வட்டி கட்ட முடியாத நிலையில் விவசாய இழப்பீடுகள் குறித்த அரசின் அறிவிப்பை எதிர்பார்த்து காத்திருப்பதுமே வாடிக்கையாகி விட்டது. இந்நிலையில் இந் தாண்டு பருவமழையால் கடந்த இரு தினங்களாக பெய்த மழையை நம்பி க.பரமத்தி ஒன்றிய பகுதியில் விவசாய பணிகளை துவங்கியுள்ளனர். பொதுவாக விவசாயத்தில்

பருவநிலை மாற்றத்தால் ஆடிப்பட்டம் மாறிப்போய், ஆவணிப்பட்டமும் போதிய மழை இல்லாததால் ஆட்டம் கண்டுள்ளது. தற்போது புரட்டாசி பட்டம் நடைமுறையில் நிற்கிறது. ஏனெனில் விவசாயத்திற்கு தேவையான பருவமழை எப்போதும் புரட்டாசி 2வது வாரத்தில் பெய்ய துவங்குவது வழக்கம் இதனால் விதைப்பு பணிகளை துவங்கியதாக விவசாயிகள் கூறுகின்றனர். எனவே, புரட்டாசி பட்டத்தை எதிர்பார்த்து தற்போதே விவசாயத்தின் ஆரம்பக்கட்ட பணிகளை துவங்கி செய்து வருகின்றனர். ஏற்கனவே அறு வடை செய்த பின்னர் காய்ந்து போன நிலத்தை விவசாயத்திற்கு பயன் படும் அளவில் பதப்படுத்தும் வேலைகளை சிலர் செய்து வருகின்றனர். ஒரு சிலர் கால்நடைகளுக்காக சோளம், கம்பு போன்ற பயிர்களுக்காக விதைப்பு செய்து அவற்றை டிராக்டரை கொண்டு உழவு பணிகளை மும்முரமாக செய்து வருகின்றனர். மொத்தத்தில் பருவமழையை நம்பி க.பரமத்தி ஒன்றிய பகுதி விவசாயிகள் நிலத்தை பதப்படுத்தும் பணிகளை துவக்கி மும்முரமாகக செய்து வருகின்றனர்.

## <u>வேளாண் மையத்தில் ஆய்வு</u>

பாபநாசம், : பாபநாசம் அடுத்த கணபதி அக்ரஹாரம் வேளாண்மை விரிவாக்க மையத்தில் வேளாண் துணை இயக்குனர் ராமதாஸ் ஆய்வு செய்தார். அப்போது விவசாயிகளுக்கு விதை நெல் மற்றும் இடுபொருட்கள் முறையாக வழங்கப்படுகிறதா, கணிணி மூலம் பட்டியல் இடப்படுகிறதா என ஆய்வு செய்தார். மேலும் கருப்பூர் ஒருங்கிணைந்த பண்ணையின் செயல்பாடு குறித்து கேட்டறிந்தார். உதவி அலுவலர் இளந்திரையன் உடனிருந்தார்.

இன்றைய வேளாண் செய்திகள்

## <u>கொடைக்கானல் அணைகளில் நீர்மட்டம் உயர்வு நகரசபை தலைவர் பார்வையிட்டார்</u>



திண்டுக்கல் மாவட்டம் கொடைக்கானல் பகுதிகளில் கடந்த சில தினங்களாக மழை பெய்து வருகிறது. நேற்று முன்தினம் மாலையில் இடிமின்னலுடன் பலத்த மழை பெய்தது. இந்த மழை தொடர்ந்து நேற்று காலை வரை நீடித்தது. கொடைக்கானல் அப்சர்வேட்டரி பகுதியில் 20.4 மி.மீட்டரும், போட்கிளப்பில் 22.5 மி.மீட்டரும் மழை அளவு பதிவாகி உள்ளது. இதன் காரணமாக கொடைக்கானல் ஏரி நிரம்பி உபரிநீர் வெளியேறி வருகிறது. இந்த நீர் வெள்ளி நீர்வீழ்ச்சி வழியாக பழனி பகுதிக்கு செல்கிறது. இந்த மழை காரணமாக கொடைக்கானலுக்கு குடிநீர் வழங்கும் அணைகளிலும் நீர்மட்டம் வேகமாக உயர்ந்து வருகிறது. நேற்று பழைய அணையின் நீர்மட்டம் 10 அடியாகவும், புதிய அணையின்

நீர்மட்டம் 15¼ அடியாகவும் இருந்தது. தொடர்ந்து மழை பெய்து வருவதால் இந்த இரண்டு அணைகளும் விரைவில் நிரம்பும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்த நிலையில் கொடைக்கானல் நகரசபை புதிய தலைவராக பொறுப்பேற்ற எம்.ஸ்ரீதர் நேற்று கொடைக்கானல் அணைகளை பார்வையிட்டார். பின்னர் குடிநீர் வினியோகம் செய்வது குறித்து நகரசபை அதிகாரிகளுடன் ஆலோசனை நடத்தினார். இதில் ஆணையாளர் (பொறுப்பு) சரவணக்குமார், பொறியாளர் சேகர் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

**<u>வேளாண்மை பொறியியல் கருவிகள் வாங்க ரூ.126 கோடி ஒதுக்கீடு</u>**



வேளாண்மை பொறியியல் கருவிகள் வாங்க ரூ.126 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு உள்ளது என்று நெல்லை மாவட்ட விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் கலெக்டர் மு.கருணாகரன் கூறினார்.

குறைதீர்க்கும் நாள் கூட்டம்

நெல்லை மாவட்ட விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் கலெக்டர் அலுவலக வளர்ச்சி மன்ற கூட்ட அரங்கில் நேற்று நடந்தது. கலெக்டர் மு.கருணாகரன் தலைமை தாங்கினார். மாவட்ட வருவாய் அலுவலர் குழந்தைவேலு, வேளாண்மைத்துறை இணை இயக்குனர் சந்திரசேகர், கலெக்டரின் நேர்முக உதவியாளர் ராஜன் ரவிச்சந்திரன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். கூட்டத்தில் விவசாயிகள், அதிகாரிகள் பேசியதாவது:-

விவசாயி கருப்பசாமி:- வறட்சியால் பாதிக்கப்பட்ட எலுமிச்சை மரங்களுக்கு இதுவரை நிவாரணம் வழங்கப்படவில்லை. இதனால் விவசாயிகள் கடுமையாக பாதிக்கப்பட்டு உள்ளனர். விவசாயிகள் கடனை திருப்பிச் செலுத்தவில்லை என்று கூறி அவர்களுடைய டிராக்டர் மற்றும் டிரைலரையும் சேர்த்து வங்கி அதிகாரிகள் ஜப்தி செய்து கொண்டு செல்கிறார்கள்.

அதிகாரி:- அரசு இதற்கு நிதி ஒதுக்கீடு செய்யவில்லை. நிதி ஒதுக்கியதும் நிவாரணம் வழங்கப்படும். விவசாயிகள் சங்க செயலாளர் கசமுத்து:- கடனாநதி பாசனத்தில் உள்ள மஞ்சபுளி அணைக்கட்டு மிகவும் பழுதடைந்து உள்ளது. புதிய ஷட்டர் போடவேண்டும். இந்த வேலை நடக்கவில்லை என்றால் அந்த பகுதி மக்கள் போராட்டத்தில் ஈடுபட உள்ளனர். கூட்டுறவு சங்க தேர்தலையும், விவசாய சங்க தேர்தலையும் நேர்மையாக நடத்த வேண்டும். பாவூர்சத்திரம் அருகே உள்ள நாகல்குளம் பகுதியில் அமைச்சரின் உறவினருக்கு நிலம் உள்ளது. அவர் அந்த வழியாக செல்கின்ற ஓடையை அடைத்துவிட்டார். இதுகுறித்து பலமுறை மனு கொடுத்தும் எந்த நடவடிக்கையும் இல்லை. நெல் அறுவடை இயந்திரத்திற்கு அதிக வாடகை கொடுக்க வேண்டி உள்ளது. இதனால் விவசாயிகள் கடுமையாக பாதிக்கப்பட்டு உள்ளனர். ரூ.126 கோடி ஒதுக்கீடு

கலெக்டர் கருணாகரன்:- தமிழக அரசு 365 வட்டங்களுக்கும் வேளாண்மை பொறியியல் கருவிகள் வாங்குவதற்கு ரூ.126 கோடி ஒதுக்கீடு செய்து உள்ளது. அந்த நிதியில் இருந்து நமது மாவட்டத்திற்கு தேவையான அறுவடை இயந்திரங்கள் வாங்க வேளாண்மை பொறியியல் துறை மூலம் நடவடிக்கைமேற்கொள்ளப்படும். கசமுத்து:- நெல்லை மாவட்டமே தற்போது வறட்சி மாவட்டமாகி விட்டது. இதில் எப்பொழுதும் வறட்சியாக காணப்படுகின்ற சங்கரன்கோவில், ராதாபுரம் தாலுகாவில் விவசாய கடன் செலுத்தவில்லை என்று ஜப்தி நடவடிக்கையில் ஈடுபடுவதை தடுத்து நிறுத்த

வேண்டும். ஆக்கிரமிப்பு சேக் மைதீன்:- பாப்பான் கால்வாயில் காற்றாலை மின்சாரம் தயாரிப்பதற்கான மின்கம்பத்தை நட்டி ஆக்கிரமிப்பு செய்து உள்ளனர். வடகரைகுளத்தில் ஆக்கிரமிப்புகள் அதிகமாக உள்ளது. அடவிநயினார் அணையில் இருந்து குடிநீருக்காவது தண்ணீர் திறந்து விடவேண்டும். அதிகாரி:- விவசாயத்திற்கு கடந்த ஆண்டைவிட கூடுதலாக தண்ணீர் கொடுத்து உள்ளோம். கலெக்டர்:- அடவிநயினார் கோவில் அணைக்கட்டின் ஷட்டர் பழுதடைந்து உள்ளது. எப்படி தண்ணீர் கொடுக்க முடியும். தண்ணீர் வருவதற்கு முன்பே தண்ணீர் ஷட்டரை சரி செய்து இருக்கவேண்டும். பொதுப்பணித்துறையினர் அதிக அக்கறை காட்டாமல் இத்தனை கனஅடி தண்ணீர் கொடுத்தோம் என்று புள்ளி விவரத்தை கொடுக்காமல் விவசாயிகளுக்கு புரிகின்ற வகையில் விளக்கம் கொடுக்க வேண்டும். விவசாயத்திற்கு தேவையான தண்ணீர் கொடுக்க வேண்டும். செல்லத்துரை:- சிறு குறு விவசாயிகளுக்கு ஆழ்துளை கிணறுகள் அமைக்க பகவதிபுரம் தொடக்கவேளாண்மை கூட்டுறவு வங்கியில் கடன் கேட்டு 7 பேர் மனு கொடுத்தனர். அதில் 6 பேரிடம் பணத்தை வாங்கி கொண்டு கடன் வழங்கி உள்ளனர். பணம் கொடுக்க மறுத்தவருக்கு கடன் கொடுக்க மறுத்து விட்டனர். கலெக்டர்:- கூட்டுறவுத்துறை அதிகாரிகள் விசாரணை நடத்தி பகவதிபுரம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கியின் செயலாளரை பணி இடைநீக்கம் (சஸ்பெண்டு) செய்யுங்கள். விவசாயிகளிடம் வாங்கிய பணத்தை உடனே திரும்ப வாங்கி கொடுங்கள். நெல் கொள்முதல் நிலையங்கள் கசமுத்து:- நெல்லை மாவட்டத்தில் நெல் கொள்முதல் நிலையங்கள், நடமாடும் கொள்முதல் நிலையங்கள் அமைக்க வேண்டும். ஆபிரகாம்:-விவசாயிகள் வறட்சியால் பாதிக்கப்பட்டு கஷ்டப்பட்டு வருகிறார்கள். வங்கி அதிகாரிகள் விவசாயிகளின் பொருட்களை ஜப்தி செய்து விட்டு குற்றவாளிகளை நடத்துவதுபோல் நடத்துகிறார்கள். நாங்கள் எவ்வளவு பணம் போட்டு இருந்தாலும் எங்களை மதிப்பதில்லை.

கலெக்டர்:- நெல்லை மாவட்டத்தில் வறட்சி நிலவுவதால் வங்கிகள் டிராக்டர்களை ஜப்தி செய்வதை நிறுத்தி வைக்க உத்தரவிட்டு உள்ளேன். சட்டப்படி நடவடிக்கை சிவகிரி பழனிச்சாமி:- கரும்பு விவசாயிகளுக்கு தரணி கரும்பு ஆலை பணத்தை கொடுக்காமல் காலம் தாழ்த்தி வருகிறது. மத்திய அரசு 11 ஆயிரம் கோடி ரூபாயை சர்க்கரை ஆலைகளுக்கு கடனாக வழங்கி உள்ளது. ரேஷன்கடைகளுக்கு சீனி மானியம் கொடுக்க வேண்டும். அதையும் நிறுத்திவிட்டார்கள். இதனால் சர்க்கரை ஆலைகளுக்கு ரூ.3ஆயிரத்து 600 கோடி மிச்சம். அப்படி இருந்தும் இவர் கள் கரும்புக்கு விலை கொடுக்க காலதாமதம் செய்து வருகிறார்கள். வருகிற 15-ந்தேதிக் குள் பணம் கொடுக்கவில்லை என்றால் முற்றுகை போராட்டத்தில் ஈடுபடுவோம். கலெக்டர்:- தரணி சர்க்கரை ஆலை நிர்வாகத்தினர் இந்த மாதம் 30-ந் தேதிக்குள் கரும் புக் குரிய விலை கொடுக்கவில்லை என்றால் ஆலை மீது சட்டப்படி நடவடிக்கை எடுப்பேன். உழவர் பாதுகாப்பு அட்டை மாடசாமி:- உழவர் பாதுகாப்பு அடையாள அட்டை வைத்து இருந்தும் விவசாயிகளுக்கு எந்த நன்மையும் கிடைக்கவில்லை. ஒரு விவசாயிக்கு கூட பென்சன் வழங்கப்படவில்லை. சுரண்டை அருகே உள்ள திருச்சிற்றம்பலத்தில் எந்த வித அனுமதியும் இல்லாமல் சிற்றாற்றில் கட்டப்பட்டுள்ள தடுப்பணையை உடனே அகற்ற வேண்டும். இல்லை எனில் போராட்டம் நடத்தப்படும். கலெக்டர்:- பொதுப்பணித் துறையினர் விரைவில் அதை அகற்ற வேண்டும். இல்லை எனில் விவசாயிகள் போராட்டம் நடத்தினால் அதற்கு நாங்கள் பொறுப்புஏற்கமுடியாது. பெரும்படையார்:-வள்ளியூர் பெரியகுளத்தில் மண் அள்ள வழங்கப்பட்டுள்ள அனுமதியை ரத்து செய்யவேண்டும். அம்பை 16, ஆடுதுரை 36 விதை நெல்களுக்கு அரசு மானியம் வழங்கவேண்டும். விதை நெல் கொடுத்த விவசாயிகளுக்கு இது வரை பணம் வழங்கவில்லை. துரைக்கண்ணு:-குலையநேரி பெரியகுளம், கருப்பாநதி அணை பாப்பான்

கால்வாய்களில் உள்ள 13 மடைகளில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்ற வேண்டும். இவ்வாறு விவாதம் நடந்தது.